//பதிவஞ்சலில்//

சென்னை-5, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்- திரு. பா. முருகேஷ், இ.ஆ.ப.,

செ.மு.எண். அநிபி.8/122745/2025 நாள். 20.01.2026

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணி நியமனம் - திரு. ஜெ. அஜித்குமார், இளநிலை உதவியாளர் (பிணையம்) பணிவரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (கியூ1)த்துறை, நாள். 08.03.2023.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.அநிபி.6/39267/2022, நாள். 02.03.2024.
3. தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணை எண். அ2/3165/2024, நாள். 15.03.2024.
4. புதுக்கோட்டை, வேளாண்மை இணை இயக்குநரின் கடித எண். பநி4/8592/2024, நாள். 03.10.2025.

••••••

ஆணை:-

சென்னை-35, தலைமைப்பொறியாளர் (வே.பொ) அவர்களின் கட்டுப்பாட்டில், தூத்துக்குடி, உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் வேளாண்மைப் பொறியியல் முதலாள் (மேற்பார்வையாளர்) ஆகப் பணிபுரிந்து 16.12.2020 அன்று அமரரான திரு. ஆ. ஜெயன், அவர்களின் வாரிசுதாரர் / மகன் திரு. ஜெ. அஜித்குமார் அவர்களுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் ரூ.19500-71900 (ஊதிய நிலை-8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பிணையம்)-ஆகப் பணி நியமனம் வழங்கி பார்வை (2)-இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநருக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

2) இதனைத் தொடர்ந்து தனியர் தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகக் கட்டுப்பாட்டில் வடச்சேரி வேளாண்மை விரிவாக்க மையத்தில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆகப் 20.03.2024 முற்பகல் அன்று பணியில் சேர்ந்து பின்னர் மண்டல மாறுதலில் புதுக்கோட்டை,வேளாண்மை இணை இயக்குநர் கட்டுப்பாட்டில் அரிமளம், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தின் கீழ் உள்ள அரிமளம், வேளாண்மை விரிவாக்க மையத்தில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆகப் பணிபுரிந்து வருகிறார்.

(தொடர்ச்சி...)

3) எனவே, பார்வை (1)-இல் காணும் அரசாணைப்படி தனியர் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணியில் சேர்ந்த நாளான 20.03.2024 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

4) தனியரின் பணி மேற்கண்டவாறு வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 28-இன் அடிப்படையில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண் பருவத்தில் வைத்தும், தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி முடித்த பின்னரே தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 30-இன்படி தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- பா. முருகேஷ்,
வேளாண்மை இயக்குநர்.

பெறுநர்

திரு. ஜெ. அஜித்குமார்,
இளநிலை உதவியாளர் (பிணையம்),
வேளாண்மை விரிவாக்க மையம், அரிமளம்,
புதுக்கோட்டை.

வழி மற்றும் நகல் :- வேளாண்மை இணை இயக்குநர், புதுக்கோட்டை.

திரு. ஜெ. அஜித்குமார், இளநிலை உதவியாளர் (பிணையம்)-இன் இணைப்பில் குறிப்பிட்ட 1 முதல் 19 வரையிலான அசல் ஆவணங்கள் மற்றும் தனியரின் பணிப்பதிவேடு (1 பவுண்டு) மற்றும் பதிவுறுத்தாள் (1 எண்) இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அவற்றைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை தனியே பட்டியலிட்டு அளிக்கக் கேட்டுக் கொள்ளப்படுவதுடன், தனியரின் பணிவரன்முறை செய்த விவரம் பணிப்பதிவேட்டில் பதிந்தமைக்கான சான்று மற்றும் பக்க நகலினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்: வேளாண்மை உதவி இயக்குநர், அரிமளம்.
நகல்: 'அபபி' பிரிவு, இவ்வலுவலகம்.
நகல்: அநிபி-6 இருப்புக்கோப்பு.

//ஆணைப்படி//

நகல் பெற்றுக் கொண்டேன்
ஜெ. அஜித்குமார்
16.02.2026

கண்காணிப்பாளர். 03/02/26

3/2/26